நாளைய நவநாகரிக
டிசைன்களை இன்றே
தெரிவு செய்யுங்கள்
* தரமான ஜவுளி
* அனைத்து டிசைன் சாரிகள்
* பட்டு, வேட்டிகள், சேலைகள்
யாழ்நகரில் தலைசிறந்த ஜவுளி சமுத்திரம்
சீமாட்டி
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 24413

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

* அன்பளிப்புப் பொருட்கள்
* அலங்காரப் பொருட்கள்
Seematy (Fancy Goods)
158, Model Market,
JAFFNA.
சீமாட்டி பாம் மார்க்கட்,
புதியவலை (இறைச்சிக் கோழி)
உடனுக்குடன் புதியனவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
T'Phone: 24096

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸ்ரீ மார்கழி மீ 10 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 12 (25-12-1985) UTHAYAN –A LIVELY TAMIL DAILY கதிர்:- 29

# அகதிகள் நாடு திரும்பும் வரை குடியுரிமைக்காரரை ஏற்க முடியாது

**முச்சந்திமுரளி**

இப்ப தான் ராஜீவ், ஒரு திருப்பம் எடுத்திருக்கிறார் போலை. இனித் தான் எங்களுடைய விஷயங்கள் "சூடு" பிடிக்கும் எண்டு நினைக்கிறன்.

## இலங்கைக்கு பிரதமர் ராஜீவ் கடும் எச்சரிக்கை

### "அப்பாவி மக்கள் கொல்லப்படுவது குறித்து முழு இந்தியாவும் கவலை"

புதுடில்லி, டிச.24

இந்தியா வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பத்திரமாகவும் கண்ணியத்துடனும் தாயகம் திரும்ப வழி ஏற்படவேண்டும்.

அதுவரைக்கும் குடியுரிமைக்காரர் எவரையும் இலங்கையிலிருந்து நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

அப்பாவி மக்கள் இலங்கையில் கொல்லப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முயற்சிக்கக் கூடாது.

இவ்வாறு நிபந்தனையும், கண்டனமும் தெரிவித்தார் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி.

புதுடில்லியில் நடந்த பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பிரதமர் ராஜீவ் காந்தி இவற்றைத் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினருக்குக் குடியுரிமை வழங்குவதாயின், ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்தியக் குடியுரிமை பெறத் தகுதி உடையவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டுமென இலங்கை அரசு வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்திருந்தன.



இது குறித்து செய்தியாளர்கள் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கேட்டனர்.

அதற்குப் பதிலளிக்கையில் திரு. ராஜீவ் சாந்தி தெரிவித்ததாவது:-

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பத்திரமாகவும் கண்ணியமாகவும் தாயகம் திரும்ப வழி ஏற்படவேண்டும்.

அதுவரைக்கும் இந்தியக் குடியுரிமை பெற்ற இலங்கை இந்தியரை நாம்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### பாலன் யேசு உதித்த கிறிஸ்தோதயக் காட்சி

### கிறிஸ்தோதய வாழ்த்து

வாசக அன்பர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் உதயன் கிறிஸ்தோதய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறான்.

## கொம்பிளான் ஒஸ்டர் பால்மா அருந்த வேண்டாம்

### உற்பத்தியாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 25

ஒஸ்டர் பால்மா, ஒஸ்டர் பீட், கொம்பிளான் ஆகிய பால்மாக்களை பாவிக்க வேண்டாம் என்று ஒஸ்டர் மில்க் தயாரிப்பாளர்களின் இலங்கை ஏஜன்டான கிளாக்ஸ்ஸோ சிலோன் லிமிட்டெட் பொது மக்களைக் கேட்டுள்ளது.

அத்தயாரிப்புக்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வேண்டாம் என்றும் சில்லறை விற்பனையாளர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

பிரிட்டனில் உள்ள பார்லி நிறுவனமே இத் தயாரிப்புக்களை உற்பத்தி செய்கின்றது.

அந்தப் பால்மாக்களில் நஞ்சு உள்ள ஒருபொருள் கலந்து இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் நிறுவனம் 40 நாடுகளில் உள்ள தனது விநியோகஸ்தர்களை குறிப்பிட்ட பால் மாக்களை விற்பனைவு செய்ய வேண்டாம் என்று கேட்டுள்ளது.

இப் பால்மாக்களை பாவித்ததனால் குழந்தைகளுக்கு வருத்தம் ஏற்பட்டுள்ளதாக லண்டனில் இருந்து ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது

## ஆசிரியர் வருடாந்த இடமாற்றம் மே 1 இல் ஜனவரியில் அல்ல

யாழ்ப்பாணம், டிச.25

ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றங்கள் மே 1 ஆம் திகதியில் இருந்து அமுல் நடத்தப்படும்.

ஜனவரி 1 இல் இருந்து அல்ல.

இப்படி கல்விச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் திரு. எம். எஸ். எம். ஆரியரட்ன அறிவித்தார்.

800 தமிழ் பேசும் ஆசிரியர்களும் 3,400 சிங்கள ஆசிரியர்களும் 1986 இல் இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

### காரைநகரில் ஒருவர் சூடுபட்டு மரணம்

யாழ்ப்பாணம், டிச.25

காரைநகர் இராணுவ முகாமுக்கு முன்னால் சென்றவர் சூடுபட்டு இறந்தார்.

இறந்தவர் ஒரு தொழிலாளி என்றும் ஆறு பிள்ளைகளுக்குத் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## பதிலடி கடுமையாக இருக்கும் என்பதை தமிழ் போராளிகள் உணர்த்திவிட்டனர் - குமாரணதுங்க

கொழும்பு, டிச. 25

அரசு தாக்கினால் பதில் தாக்குதல் வலிமையானதாக இருக்கும் என்பதை தமிழ்ப் போராளிகள் உணர்த்தி விட்டனர்.

வடக்கில் அரசுக்கு எதிராக வெடித்துள்ள போராட்டம் தெற்குக்கும் பரவும் காலம் வெகு தொலைவில் இல்லை.

இலங்கை மக்கள் கட்சித் தலைவர் திரு. விஜய குமாரணதுங்க மேற்கண்டவாறு சொன்னார்.

கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்று கொழும்பு ஆமர் வீதிச் சந்தியில் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

திரு. குமாரணதுங்க தொடர்ந்து பேசுகையில் சொன்னதாவது;

காங்கேசன்துறைக்குச் சென்று ஹம்பாந்தோட்டைக்கு திரும்பக் கூடிய நிலையில் உள்ள ஒரே ஒரு அரசியல் கட்சி இலங்கை மக்கள் கட்சிதான்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இந்த அரசினால் முடியாது. பேச்சு, பேச்சு என்று கூறுகின்றார்களே தவிர உருப்படியாக ஒன்றையும் அரசு செய்யவில்லை.

புதுடில்லி, கொழும்பு, திம்பு என்று போய் வருகின்றார்களே ஒழிய பலன் எதையும் காணவில்லை.

பூட்டோவைத் தாக்கிவிட்டவருக்கு இங்கு மகோன்னத வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இந்த நாடு பிளவு படுவதை எதிர்க்கின்றோம். அதே நேரத்தில் அப்பாவிகள் கொல்லப்படுவதையும் கண்டிக்கின்றோம்– இப்படி திரு. குமாரணதுங்க சொன்னார்.

## ஊர்காவல் படை வீரர் கடத்தப்பட்டார்

### சாம்பல்தீவில் நூறுபேர் கைது

திருகோணமலை, டிச.25

ஊர்காவல் படைவீரர் ஒருவர் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஆயுதப்படையினர் (செவ்வாய்க்கிழமை) நேற்றுப் பிற்பகல் சாம்பல் தீவுக் கிராமத்தில் தேடுதல் நடத்தினர்.

காணாமல்போன ஊர்காவல் படைவீரரின் பெயர் சி. குணவர்த்தன.

தேடுதலின்போது சுமார் 100 தமிழர்களை விசாரணைக்காக ஆயுதப்படையினர் கைது செய்தனர்.

இ.போ.ச. பஸ் ஒன்றில் இவர்கள் அனைவரையும் ஏற்றி திருமலை கடற்படைத் தளத்தில் உள்ள தடுப்பு முகாமுக்கு நேற்று மாலை 6 மணியளவில் கொண்டு சென்றனர்.

★ பலாலி விமான நிலையப் பகுதி

## விவசாயிகளுக்கு வெளியேற்ற உத்தரவு

யாழ்ப்பாணம், டிச.25

பலாலி விமானநிலைய விஸ்தரிப்புக்காக உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளை விட்டு ஒரு வாரகாலத்தினுள் வெளியேறும்படி அப்பகுதி மக்களுக்கு விமானப்படை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

கலக்கம் அடைந்த அப்பகுதி விவசாயப் பொது மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னலை மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழு ஊடாக யாழ் அரசாங்க அதிபர் திரு. எம்.பஞ்சலிங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

22 12 85காலை பலாலி விமானப்படை அதிகாரிகள் சிலர் தோட்டங்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகளை அழைத்து ஒரு வார காலத்தினுள் அப்பகுதியை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டனராம்.

அக்காணிகளில் வெங்காயம், தக்காளி, மிளகாய் போன்ற உபஉணவுப் பயிர்ச்செய்கையைத் தொடங்கிய விவசாயிகள், இடைநடுவில் இவற்றை விட்டு எங்கு போவது என்று கவலை அடைந்துள்ளனர்.

மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்ச்செய்கையின் பலனை விவசாயிகள் பெற்றுமுடிய ஆறுமாதங்கள் செல்லும்.

இருந்த பணம் எல்லாவற்றையும் போட்டு பயிர்ச் செய்கையை மேற்கொண்ட நாம் பலன் பெறுவதற்கு முன்னர் அவற்றை விட்டுப் போனால், எதைக் கொண்டு வாழ்வது? என்று விவசாயிகள் ஏங்கியுள்ளனர்.

உயர்ந்துவளரும் பயிர்களை விடுத்து ஏனைய பயிர்களைச் செய்யலாம் என்று சிலகாலத்துக்கு முன்னர் விமானப் படை அதிகாரிகள் கூறியதைத் தொடர்ந்தே, விவசாயிகள் பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர்.

"பயிர்ச்செய்கையைக் கைவிட்டு வெளியேறும்படி கூறுவது, அவர்களின் உயிரைப் பறிப்பது போலாகும்''– என்று மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழு, அரச அதிபருக்குச் சுட்டிக் காட்டியுள்ளது.

யாழ் மாவட்ட பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டு உள்ளது.

**விவசாய ஆசிரியர் பட்டியல் 4-ஆம் பக்கத்தில்**

## கல்வியங்காட்டில் புதுவித முற்றுகை

நல்லூர், டிச 25

நேற்றுக் காலை 10. 00 மணி அளவில் கல்வியங்காடு சந்தைப்பகுதி புதுவித நோக்கத்துக்காகச் சுற்றிவளைக்கப்பட்டது.

இதனால் சந்தைப்பகுதி சிறிது நேரம் அல்லோல கல்லோலப்பட்டது.

இத்திடீர் முற்றுகையை மேற்கொண்டவர்கள் வேறுயாருமல்லர். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளும், அளவை நிறுவை உத்தியோகத்தர்களும் தான்.

நிறை குறைந்த பாணை விற்பனை செய்த வர்த்தகர்களும், கிலோவுக்குப் பதிலாக இறாத்தல் படிக்கல்லைப் பாவித்து மீன்,மரக்கறி வியாபாரம் செய்தவர்களும் இவர்களிடம் வகையாக மாட்டிக் கொண்டனர்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

### மின்சாரத் தடை

யாழ்ப்பாணம், டிச.25

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நேற்று இரவு சுமார் ஒன்றரை மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டது.

இரவு 8 50 மணி தொடக்கம் 10.20 வரை நகரும் அதன் சுற்றுப் புறங்களும் இருளில் மூழ்கியிருந்தன.

லக்ஸபானவிலிருந்து வரும் மின்சாரத்தை சப்ளை செய்யும் டிரான்ஸ்போமர்கள் பழுதடைந்ததே மின்சாரத் தடைக்குக் காரணம் என அறியப்படுகிறது.

### சுபநேரம்

25 - 12 - 1985
புதன்கிழமை
சுபநேரம்:
4-57 முதல் 6-27 வரை
ராகுகாலம்:
12-27முதல் 1-57 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நத்தார் திருநாள்

## சுப்பிரமணியம்பூங்காபகுதியில் சீருடையினர் துப்பாக்கிச் சூடு

நல்லூர், டிச. 25

நேற்றுப் பகல் கோட்டைக்குள் இருந்து வெளியே வந்து சீருடையினர் சுப்பிரமணியம் பூங்கா பகுதியில் துப்பாக்கிப் பிரியோகம் செய்தனர். நீதிமன்ற ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று 12 மணி அளவில் பொலீஸ் நிலைய முன்பகுதியில் மின்சார திருத்த வேலைகள் செய்வதற்காக—

சீருடையினர் கோட்டைக்குள் இருந்து வெளியே வந்தனர்.

அச்சமயம் சுப்பிரமணியம் பூங்காவினுள் சவுக்கு மரம் வெட்டிக்கொண்டிருந்தவர்களைப் படையினர் கண்டனர்.

சுப்பிரமணியம் பூங்கா பொதுமக்களின் பாவனைக்குத் தடைசெய்யப்பட்ட பகுதி.

அதனால் பூங்காவைப் படையினர் சுற்றிவளைத்துக்கொண்டனர்.

சவுக்கு மரம் வெட்டியவர்கள் படையினரைக் கண்டதும் ஓடிவிட்டனர்.

அந்தச் சமயம் குண்டுகள் வெடித்தன.

இதனைத் தொடர்ந்து சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் யாழ். நீதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கார்த்திக் - ஜீவிதா கருத்து முரண்பாடு!

பொலிஸ் இன்ஸ்பெக்டர், கண்ணுல் கண்டதை மட்டும் நம்பி, நடவடிக்கை எடுப்பவர். சப்-இன்ஸ்பெக்டர் எதையும் விசாரித்தே செயலில் இறங்கவேண்டும் என்ற கருத்தை உடையவர்.

கடமையில் கருத்து மோதல் இருப்பினும், இருவரும் காதலித்து கரம்பிடிக்கிறார்கள். வாழ்க்கை இன்பமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

திடீரென வாழ்க்கையில் புயல்வீசத்தொடங்குகிறது.

சப்இன்ஸ்பெக்டரின் சகோதரியின் கணவர் ஒரு கொலைக் குற்றத்தில் சிக்கிக் கொள்கிறார்.

இன்ஸ்பெக்டர் கண்ணுல் கண்டதைச் சாட்சியாக வைத்துக் குற்றவாளியைச் சிறைக்கு அனுப்புகின்ருர்.

இதனுல் கணவன்-மனைவி இடையே கருத்து மோதல் ஏற்படுகிறது போராட்டம் ஆரம்பமாகிறது. போராட்டத்தில் இறுதி வெற்றி பெறுபவர் யார்? கணவனு மனைவியா, "தர்மபத்தினி" தான் பதில் சொல்ல வேண்டும்.

"தர்மபத்தினி"யில் இன்ஸ்பெக்டர் ஜோடியாககார்த்திக்.ஜீவிதா நடிக்கிருர்கள். மற்றும் சந்திரசேகர், ராதாரவி, கவுண்டமணி செந்தில், பபிதா, ஸ்ரீலேகா இன்னும் பலர் நடிக்கிருர்கள்.

இப்படத்தை தமிழ்மணி தயாரிக்கிருர். திரைக்கதை, டைரக்‌ஷன்: அமீர்ஜான். இசை: இளையராஜா. ஒளிப்பதிவு: ரவிபாபு.

### அன்டாட்டிகா குறித்து ஐ. நா

ஐ நா:டிச 24

அன்டாட்டிகாவின் வளங்கள், நிர்வாகம் முதலியவற்றில் சகல நாடுகளும் பங்கு பெற வேண்டும்.

ஐ.நா பொதுச்சபை இதனை மீண்டும் உறுதிப்படுத்தியது.

இதற்காக 92 உறுப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்தன. ஒருவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

ஆனுல்அன்டாட்டிக்கா உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் (ரஷ்யா, அமெரிக்கா உட்பட) வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை என்று அறிவித்தன.

### அஸ்ஸாம் முதல்வர் மோகன்தா பதவி ஏற்ருர்

அஸ்ஸாம், டிச. 24

அஸ்ஸாம் மாநில முதல் அமைச்சராக பிரசன்னகுமார் மோகன்தா பதவி ஏற்ருர்.

20அமைச்சர்கள் தனது அமைச்சரவையில் இருப்பார்கள் என்று அவர் சொன்னுர்.

அஸ்ஸாம் ஒப்பந்தத்தைத் தனது அரசு அமுல் நடத்தும் என்றும் முதலமைச்சர் சொன்னுர். சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு. லஞ்சம் ஒழிப்பு ஆகிய நடவடிக்கைகளையும் தனது அரசு எடுக்கும் என்றும் முதலமைச்சர் சொன்னுர்.

# பாக். பழங்குடியினரிடம் 3 லட்சம் ரைபிள்கள்

## பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என அறிவிப்பு

இஸ்லாமபாத், டிச, 24

பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் உள்ள பஷ்ரூன் பழங்குடி மக்களிடம் 3 லட்சம் கலாஷ்னிகோவ் ரைபிள்களும் நூற்றுக் கணக்கான ரொக்கட்டுக்கள், விமான எதிர்ப்பு எவுகணைகள் முதலியனவும் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கவலை தெரிவித்துள்ளது.

உள்துறை அமைச்சர் முகமது அஸ்லம் கட்டாக் பாராளுமன்றத்தில் பேசுகையில், பாரம்பரியமாகவே மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் வராத அப்பழங்குடியினரிடம் நவீன ஆயுதங்கள் புழக்கத்தில் இருப்பது பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது – என்று சொன்னுர்.

இப்பழங்குடியினர் ஆப்கானிஸ்தானிடம் இருந்து ஆயுதங்களைப் பெறுகின்றனர் – என்றும் கூறினுர் அமைச்சர்.

### மரப் பெட்டியில் பதுங்கியிருந்து அரசியல் தஞ்சம்

பாரிஸ், டிச. 24

மரப்பெட்டி ஒன்றினுள் உணவின்றிப் பத்துநாள் பதுங்கியிருந்து பிரெஞ்சுநாட்டுக்கு அருகில் வந்ததும் கடலில் குதித்து அரசியல்தஞ்சம் கோரினுர் ஒரு ரஷ்யப் பிரஜை.

ரஷ்யாவுக்குச் சொந்தமான தானியக் கப்பல் ஒன்றில் கப்பல அதிகாரிகளுக்குத் தெரியாமல் பத்து நாள் பட்டினியாக மரப்பெட்டி ஒன்றினுள் மறைந்து இருந்து வந்ததாக கேலொட் என்ற இந்த ரஷ்யர் கூறினுர்.

பாரிஸில் அரசியல் தஞ்சம் கோரிய இவருக்கு பிரெஞ்சு அரசு ஒரு மாதகால விஸாவை வழங்கியுள்ளது.

அவரின் அரசியல் தஞ்சக் கோரிக்கையை பிரெஞ்சு அரசு பின்னர்பரிசீலனைசெய்யும்.

### சுரங்க விபத்து 17 பேர் மரணம்

வார்ஸோ, டிச 24

போலந்து நாட்டின் தென் பகுதியில் இடம்பெற்ற சுரங்க விபத்து ஒன்றில் 17 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

மீதேன் வாயுக்கசிவு ஏற்பட்டதனுல் இவ் வெடிவிபத்து இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

### லிபியாவிடம் நவீன விமான எதிர்ப்பு ஆயுதம்

திரிப்பொலி, டிச, 24

நவீனரக விமான எதிர்ப்பு ஏவாயுதங்களை வைத்து இருப்பதாக லிபியா பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளது.

1500 மைல் தூரத்தைக் கடக்க நவீன ஏவாயுதங்கள் தன்னிடம் இருப்பதாக ஒப்புக்கொண்ட லிபியா, தேவைக்கு அதிகமான நவீன ரக ஆயுதங்களை வைத்து இருக்கின்றது என்று அமெரிக்கா சுமத்திய குற்றச் சாட்டை நிராகரித்தது.

## வெளி உலகில்

### ரஷ்யா நிராகரிப்பு

மாஸ்கோ, டிச. 24

ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஆயுதபரிகரண ஒப்பந்தங்களை மீறுவதாக அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டுக்களை ரஷ்யா நிராகரித்துள்ளது.

தனது ஆயுதப் பலத்தைப் பெருக்குவதற்கு ஏதுவாக ரஷ்யாவுக்கு எதிராக புதிய பிரசாரம் ஒன்றை கண்டுபிடிப்பதில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளதாக 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் குற்றஞ் சாட்டியது.

1972ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த ஆயுதபரிகரண ஒப்பந்தம் எதையும் ரஷ்யா மீறவில்லை என்றும் 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் கூறியது.

### பணயம் வைத்த மூவர் மீது வழக்கு

பாரிஸ், டிச 24

பிரெஞ்சுநீதிமன்றம் ஒன்றில் நீதிபதி, ஜூரர்கள் உட்பட 16 பேரை பணயக்கைதிகளாக வைத்த 3 பேர் மீது கொலை முயற்சி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மூவரில் ஒருவர் அமெரிக்கர். அவர் மீதான வழக்கு அமெரிக்காவில் வைத்து விசாரணை செய்யப்படும்

### நரிகள் எல்லாம் பெருங் குதிரை

யாழ்ப்பாணம், டிச.25

இன்று புதன்கிழமை நடைபெறும் இரண்டாம் நாள் மணிவாசகர் விழாவில் 'நரிகள் எல்லாம் பெருங் குதிரை' என்னும் பொருள் பற்றி அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் சிறப்புரை நிகழ்த்துகின்ருர்.

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் ஈழத்துச்சிதம்பர வசந்த மண்டபத்தில் மணிவாசகர்விழா நடைபெறுகின்றது.

காரைநகர் சைவசமய பாடப் பரீட்சையில்முதன்மைச் சித்தி பெற்றவர்களுக்கு யாழ்ப்பாண பிரதம கல்வியதிகாரி திரு இ. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

## மட்டக்களப்பில் இரண்டு சம்பவங்களில் இருவர் மரணம்

மட்டக்களப்பு,டிச.25

மட்டக்களப்பில்நேற்று செவ்வாய் காலை இரு இடங்களில் ஆயுதப் படையினர்மீது கிரனேட் வீசப்பட்டது.

இதனையடுத்து ஆயுதப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் பலியாகினர்.

சம்பவம்பற்றி மேலும் கூறப்படுவதாவது:

நேற்றுக்காலை சுமார் 9-30 மணியளவில் நகரின் பிரதான வீதிவழியாக ரோந்து சென்ற படையினர்மீது கிரனேட் வீசப்பட்டது. படையினர் திருப்பிச் சுட்டனர்.

இதனையடுத்து ஒருவர் பலியாகினுர். இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். இது முதலாவது சம்பவம்.

இரண்டாவது சம்பவத்தில் மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி. சித்தாண்டி என்னுமிடத்தில் ஆயுதப் படையினர் பயணம்செய்தபஸ் தீவிரவாதிகளால் வீதியின் குறுக்கே கார்ஒன்று நிறுத்தப்பட்டு வழி மறிக்கப்பட்டது.

படையினரின் பஸ் நிறுத்தப்பட்டபோது கிரனேட் வீசப்பட்டது.

உடனே படையினர் தமது எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர் தீவிரவாதி ஒருவர் இறந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வீதியின் குறுக்கே போடப்பட்டிருந்த காரை படையினர் கைப்பற்றினர்.

பிரஸ்தாப கார்கடந்த வாரம் இனந் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டது. இது காகிதக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. வை ஜி. எட்வேர்ட்டுக்குரியஉத்தியோகபூர்வமான கார் ஆகும்.

### ஒளிவிழா

வட்டுக்கோட்டை டிச25

யாழ் — கல்வித்திணைக்கள நலன்புரிச் சங்கத்தினர்நடத்தும் 'ஒளிவிழா' நல்லூர் ஸ்தான சி.சி தமிழ்க் கலவன் பாடசாலையில் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெறும்.

## கிளிநொச்சி வர்த்தகர்கள் இராணுவ இணைப்பு அதிகாரியை சந்தித்தனர்

கிளிநொச்சி, டிச. 25

கிளிநொச்சி, பரந்தன் பகுதிவர்த்தகர்கள் புதிய கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி மேஜர் கொப்பேகடுவவைச் சந்தித்து உரையாடினுர்கள்.

21ஆம் திகதி நடைபெற்ற இச்சந்திப்பில் பல வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வர்த்தகர்கள் இணைப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

கிளிநொச்சியின் இணைப்பதிகாரியின் அலுவலகமான நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளர் விடுதியில் இச்சந்திப்பு நடந்தது.

சந்திப்பின்போது இராணுவத்தைக் கண்டு வர்த்தகர்கள் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடிவிட வேண்டாம் எனவும், வர்த்தகர்கள் தங்கள் குறைபாடுகளை உடனுக்குடன் தனக்கு நேரில் தெரிவிக்குமாறும் இணைப்பதிகாரி கேட்டுக்கொண்டார்.

இது இவ்வாறிருக்க கிளிநொச்சி கண்டி வீதியில் தற்காலிகமாக இயங்கிவரும் சகல அங்காடிக் கடைக்காரர்களும் கடைகளைக் காலி செய்யுமாறும் புதிய சந்தையில் வியாபாரத்தை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் ஊடாக புதிய இராணுவ இணைப்பதிகாரி அறிவித்தல் கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

கூட்டுறவு வைத்தியசாலை

பதவி வெற்றிடங்கள்

எதிர்வரும்19. 01. 86 தொடக்கம் இயங்கவிருக்கும் கூட்டுறவு வைத்தியசாலையில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 05-01-86க்குப் பிந்தாமல் சங்கக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கவும்.

1. வைத்திய அதிகாரி M.B.B.S
2. தாதிமார்
3. வைத்தியசாலை அற்றென்டன் (Hospital Attendent)
4. சுத்திகரிப்பு ஊழியர்

பொதுமுகாமையாளர்
யாழ்.ப.நோ.கூ.சங்கம்.

127.கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 24. 12 85.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வரையறுக்கப்பட்டது)

தடைப்பட்ட சேவை மீண்டும் தொடர்கிறது

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வைத்தியசாலை மீண்டும் 1986. 01. 19ல் திறக்கப்பட உள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்ருேம்.

நாட்டின் சீரற்றதன்மை காரணமாக வெளிநாடு சென்ற வைத்திய நிபுணர்களின் இழப்பினுல், தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட வைத்திய சேவையை, யாழ் மக்கள் அநேகரின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க, அனுபவம் மிக்க வைத்திய நிபுணர்களின் அனுசரணையுடன் விரைவில் ஆரம்பிக்கின்ருேம்.

1. சத்திர சிகிச்சை உட்பட சகல வைத்திய சேவைகள்,
2. வெளி நோயாளர் சேவை மட்டுமன்றி, உள் நோயாளர் சிகிச்சை.
3. சிறந்த நிபுணத்துவ ஆலோசனை வசதி. (Channel Practice)
4, இரவு, பகல் சேவை

சகல சேவைகளையும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

யாழ்ப்பாணம் பல நோ.கூ. சங்க வைத்தியசாலை
17, கண்டி வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 22626

பொது முகாமையாளர்,
யா ப.நோ.கூ.சங்கம்.

மேற்கு ஜெர்மனி
* பிரான்ஸ்
* இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி
DECEMBER 26ஆம் திகதி
இங்கிருந்து அழைத்துச் செல்வார்
மற்றும்
பாஸ்போர்ட், பௌண்ட், விசா
என்பவற்றுக்குத் தொடர்புகொள்ளவும்.

லிப்ரூஸ் லிமிட்.,

R. G.கட்டடம்,
70,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road,
PETTAH,
T'Phone: 29148

இனாம்!
மாணவ மணிகளுக்குரிய பாடசாலை "பாக்" (துணி) மில்க்வைற் சோப் மேலுறைகளுக்கு இனாமாக வழங்கப்படுகிறது.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த
நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்
உரித்தாகுக.
உங்கள் அபிமானத்துக்குரிய
மில்க்வைற் நீலசோப்
மெருகூட்டப்பெற்று, கூடிய எடையுடன் விலை குறைக்கப்பெற்று விற்பனையாகின்றது.
புதிய விலை ரூ.2-00 மட்டுமே.
20 மில்க்வைற் நீல சோப் அல்லது 8 பார் சோப் அல்லது 8 சுப்பர் மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அழகிய காந்திக் கலண்டர் ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும்
எமது உளம் கனிந்த
நத்தார் திருவாழ்த்துக்கள்

SRI RAMS TEXTILE PROCESSING CO. LTD.,
Kondavil Road, Irupalai,
KOPAY.
T'Phone: 24087—JAFFNA Grams: SRIRAMS (KOPAY)

நத்தார் புதுவருட
நல் வாழ்த்துக்கள் !

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, ST. PETERS LANE, HOSPITAL ROAD,
JAFFNA.
(Opp. O.L.R. Church) T'Phone: 24355
*
NURSING
DIPLOMA IN NURSING
தாதிப் பயிற்சியில் டிப்ளோமா!
6 மாத பயிற்சி நெறி
ஜனவரி 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

### உதய சங்கற்பம்

ஆலோசனை எங்கே இல்லையோ, அங்கே சித்தங்கள் சிதைந்து போகின்றன. சிந்திப்போர் எங்கே அதிகமோ, அங்கே சித்தங்கள் வலுப்படுகின்றன.

பழமொழி 16'22
பைபிள் முத்துக்கள்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, வேதா ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 24805
22073
25-12-85 த. பெ. 23

# மேகங்களே நீதியைப் பொழிக!

இன்று கிறிஸ்தோதயத் திருநாள்.

1985 வருடங்களுக்கு முன்னர், ஐரோப்பிய நாடுகளில் அநீதியும், அக்கிரமும் நிலவிய போது யேசு எனும் மனித தெய்வம் உதித்தார். அநியாயம், அட்டூழியம் ஆகியவற்றில் இருந்து மக்களை இரட்சிப்பதற்காக அந்தத் தேவதூதர் அவதரித்தார். அவர் மண்ணுலகில் விட்டுச் சென்ற வாழ்க்கை நெறி தான் கிறிஸ்தவம். அந்தக் கிறிஸ்தவத்தைப் பின்பற்றும் கோடானு கோடி மக்கள் உலகின் நாலா பக்கங்களிலும் வாழ்கிறார்கள். அவர்கள் மனுசுதன் யேசு பிறந்த தினத்தை வருடாந்தம் கொண்டாடுவது வழக்கம்.

இலங்கையிலும் கிறிஸ்தவப் பெருமக்கள் வாழ்கிறார்கள். தமிழ்ப் பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் கிறிஸ்தவ சமயத்தைக் கடைப்பிடிப்பவர்கள் வாழ்கிறார்கள்.

அந்தக் கிறிஸ்தவப் பெருமக்கள், தமிழ் மக்களில் ஏனையோரைப் போலவே நித்தம் நித்தம் செத்துப் பிழைக்கிறார்கள். யேசுபிரான் சிலுவையில் அறையப்பட்டு மரித்த மூன்றாவது நாள் உயிர் மீண்டார். ஆனால் எமது தமிழ் மக்களோ வினாடிக்கு வினாடி உயிர் நீத்து மீளுகிறார்கள்.

அவர்களில் பலர் அநாதைகளாகி அகதி முகாம்களில் தங்க வேண்டிய நிர்க்கதிக்கு ஆளாகிவிட்டார்கள். அவர்களால் கிறிஸ்து பிறந்த நாளை, ஏனைய நாட்டுக் கிறிஸ்தவ மக்கள் போல, தென்னிலங்கையில் உள்ள கிறிஸ்தவர்களைப் போலக் குதூகலமாகக் கொண்டாட முடியவில்லை.

பாவம் செய்தவர்களையும், குற்றம் செய்தவர்களையும் மன்னித்து அவர்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்பது கிறிஸ்துவின் போதனை. ஆனால் இலங்கைத் தமிழ் நிலத்தில் குற்றம் செய்யாதவர்களும் தண்டிக்கப்படுகிறார்கள்.

ஒன்றும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள் சுடப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் தெய்வ நிந்தனைக்குச் சமன். ஆனால் ஆட்சி அதிகார வெறி எல்லா நெறிகளையும் மறந்துவிடச் செய்கிறது.

இந்த அநீதியிலும், அக்கிரமத்திலும் இருந்து தமிழ் மக்களுக்கு விடிவு எப்போது?

தமிழ் மக்கள் பாவம் செய்திருந்தால் அவர்களை யேசு மன்னிக்கட்டும்! அவர்களை இரட்சிக்குமாறு அவனிடமே இறைஞ்சுவோம்.

மனிதனின் போட்டி, பொறாமை, போர், அநீதி, அக்கிரமம், அநியாயம், பாவம் ஆகிய எல்லாவற்றையும் ஆண்டவன் அளந்து கொண்டே இருக்கிறான். அவன் அருள் தான் இவற்றிலிருந்து மக்களை மீள்விக்க வேண்டும்.

வானமே, மேலிருந்து பனிமழை பெய், மேகங்களே நீதியைப் பொழிக! நிலம் திறக்கப்படுக! மீட்பு முளைப்பதாக! அதனோடு நீதியும் தளிர்ப்பதாக! ஆண்டவராகிய நாமே அதைச் செயலாற்றுகிறோம். (பைபிள்)

# தபால் நிலைய கொள்ளையை நிறுத்த வேண்டுகோள்

மட்டக்களப்பு, டிச. 25

மட்டக்களப்புப் பகுதியில் தபால் நிலையங்கள் மீது தொடர்ந்து நடைபெற்றுவரும் கொள்ளைகளால் தபால்நிலைய அலுவல்கள் ஸ்தம்பிதம் அடைந்து மூடப்படலாம். இந்நிலையில் தபால் நிலையங்கள் கொள்ளையடிக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும் தபால் நிலைய ஊழியர்களும் பொதுமக்களும் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் இதுதொடர்பாக விடுத்த கோரிக்கை வருமாறு:

ரயில்சேவையை நிறுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது மணி ஓடர் டிக்கெட் மூலம் சேவையைத்தொடர்ந்து நடைபெற தபால்நிலையங்கள் உறுதுணையாக நிற்கின்றது.

தபால், உப தபால் நிலையங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தொடர்ந்துகொள்ளையர்களால் தாக்கப்பட்டு வந்தன. இருப்பினும் பொதுமக்கள் சேவை சீர்குலையக்கூடாது எனக் கருதி பல்வேறு பிரச்சினைகள் மத்தியிலும் அவை மூடப்படாமல் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

தபால் நிலையங்கள்மீதான கொள்ளைகளால் தபால் ஊழியர்கள் தமது கடமைகளை மேற்கொள்ள அஞ்சுகிறார்கள்.

இந்நிலையில் தபால் நிலையங்களின் சேவைகள் பாதிக்கப்படலாம். பொதுமக்கள் தபால் சேவையை மட்டுமின்றி, ரயில் பயண சேவையையும் இழக்கவேண்டி ஏற்படலாம்.

எனவே பொதுமக்களின் அத்தியாவசிய சேவை பாதிப்படையாமல் இருக்க தபால்நிலையங்களில் கொள்ளை அடிக்கவேண்டாம்.

# இவ்வுலகம் உய்வதற்கு இறைவன் வந்தார்

**அருள்திரு டி. ஆர். அம்பலவாணர்**

இறைவன் அன்பின் திருவுருவாக இவ்வுலகைச் சந்தித்த நிகழ்ச்சியை நினைவுகூரும் திருநாளே, கிறிஸ்து பெருமான் பிறந்த பெருமங்கலப் பண்டிகையாகும்.

இத்திருநாள், வேந்தர் வேந்தன் வறுமைச் சூழலில் வந்துதித்த விமல நாள். மனித இனத்தவரின் மனத்துயர் நீக்கிய மாண்புமிக்க பெருநாள். மக்களனைவருக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் மங்கல நாள்.

கிறிஸ்து பெருமானின் பிறப்பு, தெய்வ அன்பின் மாட்சிக்குத் தெளிவான காட்சி; இறைவன் நம்முடன் இருக்கிறார் என்பதை உணர்த்தும் உன்னத நிகழ்ச்சி. மன்பதைக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியை அளிக்க வந்த அவதார அண்ணல், பாமரரும் பரம ஏழையரும் பார்த்துத் துதிக்க இடந்தரும் பான்மையில், மாடடைத் தொட்டிலைத் தெரிந்து கொண்டார்.

எவரும் துணிவுடனும், நம்பிக்கையுடனும் அவரை அண்டிப்போகக் குழந்தையாகித் தரித்திரருடன் தனியுறவு கொண்டார். இந்த உண்மையே கிறிஸ்மஸ் பெருநாளின் செம்பொருளாகும்.

இறைவன் ஏழையாக வந்ததின் நோக்கம், உலகில் சமாதானமும் மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் ஒப்புரவும் நிலவச் செய்வதற்கே.

அன்று இயேசு பெருமான் பிறந்த நாளில், ''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சிமை, உலகில் மனிதரிடையே சமாதானம், மனிதர் மேல் அவருக்குப் பரிவு'' என விண்ணுலகப் படைத்திரள் இறைவனைப் புகழ்ந்து பாடியதின் உண்மையிதுவே.

இறைவன் தரும் சமாதானத்தைப் பெறுவது எளிதல்ல. நம்மில் உள்ள தன்னலங்கருதும் போக்கு, உணர்ச்சிவயப்பட்டு மேற்போக்காய் வாழும் பொய் வாழ்க்கை ஆகிய இத்தன்மைகள் நம்மில் இருக்குமளவும் கடவுள் தரும் அமைதியை நாம் பெற முடியாது.

இவை நம்மிலிருந்து அகல வேண்டும். அதன் பின்னரே கடவுள் நிலையான அமைதியை நமக்குத் தமது அருட்கொடையாக அருளுவார். மதிப்புக்குள் அடங்கா அன்பையும், தன்னையே தியாகம் செய்யும் பண்பையும் கொண்டவர்களுள்ளேயே இவ்வமைதி நீங்காது நிலைக்கும்.

இவ்வுலகம் இன்று சமாதானமற்று சீர்குலைந்து வருவதை நாம் காண்கிறோம். குறிப்பாக நமது நாடு அமைதியற்று அவலநிலையடைந்து வருவதை நாம் வேதனையுடன் அனுபவித்து வருகிறோம். நாம் மனதார நாடும் இச் சமாதானம் ஏற்படத்தக்க வழியுண்டென்ற நம்பிக்கையை உண்டாக்கும் திருநாளே ''கிறிஸ்மஸ்'' பெருநாளாகும்.

இப்பெருநாளைக்கொண்டாடும் இந்நாட்களில் நம் மத்தியில் சமாதானத்தை நிலவச் செய்யும் பணிகளில் ஈடுபடவே கிறிஸ்து பெருமான் நம்மை அழைக்கிறார்.

போர் நிலை சமாதானத்தைக் கெடுப்பது போல், அநீதியும் சமாதானத்திற்குக் கேடுவிளைவிக்கின்றதென்பதை நாம் அறிய வேண்டும். குண்டு வீச்சு மட்டும் மனித அமைதியைக் கெடுப்பதில்லை; மனிதனின் அடிப்படை உரிமைகளை மதியாதசெயல்கள், ஒருவர் அடுத்தவரைத் தனியாக ஒதுக்குதல், ஆகிய இவையனைத்தும் உள்ளத்தை ஒடுக்கி உயிர்ச் சக்திகளை வற்றச் செய்யும் செயல்களே. இதனாலேயே இன்று நாம் எதிர்பார்க்கும் நற்பண்புகளை மக்கள் மத்தியில் காண முடியவில்லை.

வருங்காலம் வஞ்சிக்கப்படக் கூடிய காலமாயிருப்பதால், நமக்கு அருகிலுள்ள ஆண்டவரைப் பின்பற்றுவதில் நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். நம் மருகில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளக் குமுறல்

இயேசுவே மீண்டும்
பிறந்து விடாதே!
இயேசுவே மீண்டும்
பிறந்து விடாதே!
அந்தப் பாவக்காரரை
மீட்க முடியாது
உன் பயணத்தின் பலன்
பூஜ்ஜியமாய் விடும்.
இயேசுவே மீண்டும்
பிறந்து விடாதே!

* * *

தரையில் உருட்டப்பட்ட
தலைகள் எத்தனை!
எத்தனை உடல்கள்
தசையும்
பிண்டங்களுமாய்
தனியாய்ப் போயின!!
ஒவ்வொரு
இடத்திலும்
ஓடிய குருதியின்
விலைதான் என்ன..?

* * *

வீதிகளிலும்
வயல்களிலும்
வீடுகளிலும்
கடைகளிலும்,
சந்திக்குச் சந்தி
மூலைக்கு மூலை,
விழிகள் பிதுங்க,
கைகளும் கால்களும்
வேறாய்க் கிடக்க
விழுந்து கிடந்த
ஜீவன்கள் புரிந்த
பாவங்கள் என்ன?
பாவத்தின் சம்பளம்
மரணம் என்றாயே
ஏதும் அறியாத
அந்த ஜீவன்கள் புரிந்த
பாவங்கள் என்ன?

* * *

தோட்டந்துரவிலும்-சுடு
காட்டிலும் கடலிலும்
வெந்தும் வேகியும்
அழுகிச் சிதைந்தும்
அவர்கள் ஏன்
கிடப்பான்?
அவர்கள் புரிந்த
பாவங்கள் என்ன?
உன் ஐந்தொகையில்
ஒருபிழை இருக்கிறது!
அங்கே
திரிந்து கொண்டிருக்கும்
உன் திருக் குமாரர்கள்
அந்தப் பிழையைத்
திருத்தத்தான்
புறப்பட்டவர்கள்.
ஆம்—
அவர்கள் வழியில்
போகட்டும்
அவர்களுக்கு அது
தொடுவானமல்ல
அந்தவானம்
அவர்கள் கைகளுக்கு
அருகில் தான்
காணாமல் கிடக்கிறது.
அவர்கள் கண்டு பிடித்து
விடுவார்கள்
அதுவரை இயேசுவே நீ
பிறந்து விடாதே.
இயேசுவே மீண்டும்
பிறந்து விடாதே.

- அ. தத்வசுதன் -

# தேவன் அருளிய மிக பெரிய ஈவு கிறிஸ்துவே

அன்று பவுல் அப்போஸ்தலன் தன் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கிய அன்பினால் ஒரு வார்த்தை கூறினார், ''தம்முடைய சொந்தக்குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர். அவரோடே கூட, மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?'' (ரோமர்8:32) இதுவே அந்த வார்த்தை ஆகும்.

அன்பானவர்களே! இன்று நாமும் அப்படியே எம் உள்ளங்களில் கூறுவோம். எம் பரம பிதா சகல ஆசீர்வாதங்களையும் எமக்கு அருளுவார். தேவன் அருளிய மிகப் பெரிய ஈவு கிறிஸ்துவே! அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். அந்த அன்பிற்கு அளவில்லை.

அகலமும் நீளமும் ஆழமும் அறிய முடியாத அந்த அன்பை எழுதித் தீர்க்க யாரால் கூடும்? எல்லா ஜலமும் மையானாலும் எல்லா மரமும் பேனாவானாலும் ஆகாயத்தைத் தாளாக்கி அதிலெல்லாம் எழுதினாலும், இந்த அன்பை எழுதித் தீர்க்க யாரால் கூடும்? என்று ஒரு பக்தன் பாடினான்.

அப்படிப்பட்ட அன்பை எம் உள்ளத்தில் வரவழைப்போமா? அந்த அன்பு இன்று எம் உள்ளத்தில் பிறக்க இடம் கொடுப்போமா? இன்று பிறந்த அன்பு என்றும் மாறாமல் எம் உள்ளத்தை நிறைத்திருக்க, அந்த ஆண்டவரை எம் உள்ளத்தை விட்டு அகலாமல் காத்துக் கொள்வோமா? உள்ளத்தில் பிரவேசித்த ஆண்டவரைத் துக்கப்படுத்தாமல் அவருக்குப் பிரியமான வழியிலேயே நடக்கப் பிரயாசைப்படுவோமாக.

'இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்கள் உள்ளத்தில் பிறக்கட்டும்''

உங்கள் அன்புக் குடும்பத்தினருடன் மகிழ்ந்து கொண்டாடும் இந்நன்னாளிலே தேவ கிருபை, தேவ பிரசன்னம், தேவ பாதுகாப்பு உதயன் வாசகர்களாகிய உங்களுடன் நிறைவாய்த் தங்குவதாக. ''இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்''

(லூக்கா 2:11)

இது தான் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தூதன் காபிரியேலினால் அறிவிக்கப்பட்ட நற்செய்தி! அன்றிலிருந்து இன்றுவரை ஒரு நாளை எல்லோரும் ஒரு மனமாகத் தெரிந்துகொண்டு ''இன்று கர்த்தராகிய கிறிஸ்து பிறந்த நாள்'' என்று கிறிஸ்மஸ் தினத்தை ஒரு பெரும் கொண்டாட்ட தினமாக மகிழ்ந்து கொண்டாடுகிறார்கள்.

இன்றுடன் எமதுநோக்கம் முடிந்து விட்டதா? அடுத்த வருடம் நத்தார் வரை நம் இஷ்டம்போல் வாழ்வதா? சந்திப்போம்.

அன்று இராஜாதி இராஜன் தாழ்மைக் கோலம் எடுத்து பூவுலகில் வந்து உதித்தது உண்டு களித்து உடுத்து மகிழ்வதற்காக அல்ல. பிரியமானவர்களே! பாவிகளை இரட்சிக்க! பாவச்சேற்றில் உழன்று கொண்டிருக்கும் மானிடரை மீட்க! பாவத்தின் பிரதிபலன் எது என்பதே தெரியாமல் பாவத்தைப் பாலைப் போல் பருகும் நீசரை மீட்டுப் பரலோகம் சேர்க்க!

அன்பர்களே! நம் உள்ளம் அந்த இயேசு பாலகனண்டை திரும்பட்டும். அவரை அகக்கண்களால் பார்க்கும்போது நம் உள்ளம் ஆனந்தத்தால் நிறையட்டும். நம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழியட்டும். எனக்காக! எனக்காக! என் அன்பர் பிறந்திருக்கிறார்!

பாவியும் துரோகியுமாகிய எனக்காக என் நேசர் தன் மகிமையெல்லாம் துறந்துபூவுலகிற்கு இறங்கியிருக்கிறார் என்ற இன்பகீதம் எம் இதயமெல்லாம் ஒலிக்கட்டும். உதடுகள் நன்றியோடு ''தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்குஸ்தோத்திரம்'' (2 கொரி 9:15) என்று துதிக்கட்டும்.

- சாந்தி சௌந்தரராஜா -

### பொய்யாமொழி

**குறள்:**

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

**பொருள்:**

நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்ற பெரியோர் ஒரு கணப்பொழுதே ஆயினும் சினம் கொண்டு காத்தல் அரிதாகும்.

### வாசகர் கவனத்திற்கு

ஈழம் தேசிய விடுதலை முன்னணி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜர் விவரத்தின் இரண்டாம் பகுதி இட நெருக்கடி காரணமாக இன்று வெளிவரவில்லை. இரண்டாம் பகுதி நாளை 26ஆம் திகதி வெளிவரும்.

# திருவெம்பாவை

**இவ்வண்ணம் ஆட்கொள்ளும்**
**வித்தகர் தாள்பாடி நீராடுவோம்**

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே
நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங்களிகூர
நீரொருகாலோவா நெடுந்தாரைக் கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர்
எம்பாவாய்.

### பொருள்

அன்பு என்றாலும் காதல் என்றாலும் ஒன்றுதான். பக்தி என்றாலும் ஒருவகையில் காதல்தான். பக்திப் பித்தேறிய கன்னி ஒருத்தியின் நிலையை வர்ணித்து இவ்வண்ணம் அவளைப் பித்தேறச் செய்த இறைவனுடைய திருவடிகளைப் பெண்களே! நாம் வாயாரப்பாடி இந்த அழகான பூம்புனலில் பாய்ந்து நீராடுவோம் என்று கன்னியர் குழாத்தின் சார்பில் பேசுகிறாள் ஒருத்தி.

எம்பெருமான் என்று இடையிடையே ஒவ்வொரு தடவையும் இறைவனுடைய சிறப்புக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறாளாம் பெண் ஒருத்தி. ஒய்வு ஒழிவு இல்லாது எந்தநேரமும் வாய்ஓயாது அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறாளாம் இன்னொருத்தி. அவளைப் பார்த்து 'வாயாடி' என்று அவளுக்குப் பெயர் சூட்டியாகிவிட்டது. அவள் சித்தத்தில் களிப்பு எப்படி நிறைந்திருக்கவேண்டும்!

தாரைதாரையாக ஆனந்தக்கண்ணீர் வடித்த வண்ணம் இருக்கின்றாள் வேறொருத்தி. இவளைப் 'பார் ஒருகால் வந்தனையாள்' என்று குறிப்பிடுவது கூர்ந்துநோக்கத்தக்கது. விண்ணுலகத்திலிருந்து இவள் இப்போதுதான் நழுவி இம்மண்ணுலகத்துக்கு வந்தவள்போலக் காணப்படுகிறாளாம். இப்படிப் பூமியில் வேறெவரும் இருக்கமுடியாது என்பது குறிப்பு. அழகிலும் அன்பிலும் நிகரற்றவள் என்ற குறிப்பையும் இதிற்காணக்கூடியதாயிருக்கின்றது. விண்ணிலிருந்து மண்ணுலகத்துக்கு வந்தவர்கள் விண்ணோரைப் பணிவதில்லையாம். பேரரசன் மீது அன்புகொண்டவர் குறுநில மன்னர்களை லட்சியம்பண்ணமாட்டார்கள். இங்ஙனம் இவளைப் பித்தேறச்செய்த வித்தகர் யாரோ அவருடைய திருவடிகளை வாயார நாம்பாடி இந்த அழகிய பொய்கையில் நீராடுவோம் என்று உரைத்து நிற்கிறாள் உத்தமி ஒருத்தி.

**என்னப் பொழியாய் மழை**
**மலிவளம் மிகுந்த வாழ்வு தர**

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தெம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னியவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர்
எம்பாவாய்.

### பொருள்

மழையே! மழையே! வா வா வா என்று குழந்தைகள் கூடிநின்று பாடுவதுண்டல்லவா? அப்படியே 'மார்கழி நோன்பு' என்ற விரதத்தை அனுஷ்டித்துப் பஜனைசெய்து வந்த பெண்களும் கெர்ப்போட்டக்காலத்தில் கருக்கொண்ட மேகங்கள் தெற்கு முகமாய் ஓடிவருவது கண்டு உற்சாகமாக, 'மழையே நீ பெய்யவேண்டும்; நாடு செழிக்க வேண்டும்' என்று பாடுகிறார்கள். இத்தகையபாடல் ஆண்டாள் திருப்பாவையிலும் உண்டு.

ஆகாயத்தைப் பார்த்தால் ஒரு கருங்கடலே அப்படியே வந்துகிடப்பதுபோலத்தோன்றுகின்றது. 'மேகமே! நீ போய்க் கடலைச்சுருக்கி வானவீதியில் இழுத்துக்கொண்டுவந்துவிட்டாய்' என்று சொல்லத் துணிகிறார்கள் பெண்கள். கருமேக நிறங்கொண்ட உமாதேவியார்தம் அருள் வடிவத்தை ஒப்பிட்டு எங்கள் தாய்தான் இவ்வாறு காட்சி தருகின்றாள் என்கிறார்கள். மேகத்தில் மின்னல் பளிச்சிடுகிறது. அதுவும் உமாதேவியைத்தான் ஞாபகப்படுத்துகின்றதாம். மின்னிக்கொண்டு வருகிறது மின்னலைப்போன்ற இடையையுடைய அம்பிகை. மின்னல் வந்தால் இடியும் வரத்தானே வேண்டும். தாயின் கொலுசு, பாதசரங்கள் ஒலி செய்கின்றன. அத்துடன் வானவில் தோன்றுகின்றது. அது அம்பிகையின் அழகிய புருவம்தானாம்.

இப்படியெல்லாம் தேவியை ஞாபகமூட்டும் மேகம் மழைபெய்யும்போது தாயின் கருணையே போன்று வருகிறது கருணைமழை. பக்தி வயல்களில் தூய உள்ளங்களுக்கு திருவருள் மழையானது 'சோ'வென்று கொட்டவேண்டும் என்று பாடுகிறாள் பாவையொருத்தி.

ரெடிமேற் ஆடைகள், பிளவுஸ்
துணிகள் சகல புடவை
தினுசுகளுக்கும்
ஜவுளியகம்
**உ தயதிலகம்ஸ்**
176 (86), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 24150

உதயன்
25-12-85

வாடிக்கையாளர்களுக்கு
எமது நத்தார் — புதுவருட
வாழ்த்துக்கள்!
**உ தயதிலகம்ஸ்**
174 (86), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 24150
புடவை மொத்த – சில்லறை
விற்பனையாளர்கள்.

★ ஐரோப்பிய பொருளாதார சமூகம்

# பாதிக்கப்பட்ட தமிழருக்கு உதவி

யாழ்ப்பாணம், டிச.25

இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழரின் புனர்வாழ்வுக்கு என்று ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த ஐரோப்பிய பொருளாதார சமூகம் நிதி உதவி செய்யத் தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமாக ஐரோப்பிய பொருளாதார சமூக ஆணைக் குழு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

1985 ஏப்ரலில் வெடித்த வன்செயல் காரணமாககிழக்கு மாகாணத்தில் காரைதீவுக் கிராமத்தில் இருந்து வெளியேறிய 500 தமிழ்க் குடும்பங்களை மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்துவது.

1983 வன்செயலில் தோட்டப் பகுதிகளில் இருந்து வெளியேறி கிளிநொச்சி மாவட்டத்தில் அமைதிபுரம் என்னும் இடத்தில் தங்கியுள்ள 60 தமிழ்க் குடும்பங்களுக்கு புனர் வாழ்வளிப்பது.

இந்த இரண்டு மறுவாழ்வுத் திட்டங்களுக்குமே ஐரோப்பிய பொருளாதார சமூகம் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது.

## இரண்டாவது பிறந்த தினம்

**செல்வன் ஆதிரையன் பாலச்சந்திரன்**

77, பாரதி வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த பாலச்சந்திரன் — ஜெயலட்சுமி தம்பதியின் செல்வப் புதல்வன் ஆதிரையன் (மதன்) தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (25-12-85) திருநெல்வேலி சேர்ந்த, நாவலடி ஒழுங்கையில் உள்ள தமது இல்லத்தில் தம்பி இளந்திரையனோடு கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, தம்பி, அப்பப்பா, அப்பம்மா, சுண்டுக்குளி அத்தை, சித்தி, சித்தப்பாமார் தேவச்சந்திரன் (கட்டார்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), பிரேமச்சந்திரன் (கனடா), சேமச்சந்திரன் (நோர்வே), ஐயா, அம்மம்மா, பெரிய மாமா (ஜேர்மனி), பேபி மாமா (இத்தாலி), ரூபா மாமா (இத்தாலி), சின்ன மாமா, சிறி மாமா (ஜேர்மனி), குட்டி மாமா மற்றும் பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்திமார் அக்காமார், அண்ணாமார், மாமாமார், உற்றார், உறவினர்கள் யாவரும் பல்கலையும் கற்று, நலமுடன் வாழ பல்லாண்டு பாடுகிறார்கள்.

## இறந்தவர் அடையாளம் காணப்பட்டார்

மட்டக்களப்பு டிச.25

கடந்த வாரம் நடைபெற்ற காத்தான்குடி தபால் நிலைய கொள்ளையின்போது பொது மக்களிடம் சிக்கி பலியான இளைஞன் மட்டக்களப்பு அதிகார் வீதி வாசியான நேசராஜா. மதியழகன் (18 வயது) என தெரிவிக்கப்படுகின்றது இந்த இளைஞனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் புளியந்தீவு பகுதியில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

## மலிவு விற்பனை

26-12-85 வியாழக்கிழமை பருத்தித்துறை, வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் நடத்தும் கண்காட்சியில் அமைந்துள்ள மில்க்வைற் காட்சி சாலையில் ரூ 15/-ற்கு மேல் மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு வீட்டுத்தோட்ட விதைகள், பொலித்தீன் பாக், அறிவு நூல்கள், நேர சூசி, ஒரு முகக் கலண்டர் தான் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அவற்றைக் கொடுத்துப் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

## சுப்பிரமணியம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

நீதிமன்ற அலுவல்களுக்காக வந்த மக்கள் சிதறி ஓடினார்கள்.

கடைகள் இழுத்து மூடப்பட்டன. சுமார் அரை மணித்தியாலம் வரை இராணுவத்தினர் திருத்த வேலைகள் முடியும்வரை வெளியே காவல் நின்றனர் இதனால் பிரதான வீதியூடாக வந்தவாகனங்கள் அனைத்தும் வேறு வழியாகத் திரும்பி பஸ் நிலையத்தை அடைந்தன.

பிற்பகல் நகர் வழமைக்குத் திரும்பியது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டு இருந்த ஒருவர் காயமடைந்தார்.

## நாளை கூட்டம்

நாகர்கோவில், டிச. 25

பருத்தித்துறைக் கல்வி வட்டத்தின் பொதுக் கூட்டம் நாளை 26 ஆம் திகதி திரு. மு. பொ. வீரபாகுவின் தலைமையில் வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்

## இவ்வுலகம்....

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

உள்ள ஆண்டவரிடம் நாம் நேரடித் தொடர்பை இழந்தோமானால், நங்கூரமில்லா மரக்கலம் போல், கடல் அலையில் அகப்பட்ட துரும்பைப் போலாகி விடுவோம்.

இந்நிலையை மாற்றவே இயேசு பெருமானில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டியது அவசியம்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் பயமும்திகிலும் அதிகமாகக் குடிகொண்டுளளது. வீட்டிலும் அமைதியில்லை, வீதியிலும் பாதுகாப்பில்லை. தமிழனின் உயிருக்கே மதிப்பில்லை, உரிமைகளுக்கு இடமில்லை. குண்டு வெடியோசையும் கோரக் கொலைகளும் கண்டுதினம் கலங்கி வாழ்கின்றனர். யாரிடம் போவோம்? எவரிடம் போயிருப்போம்? என்று ஏங்கித் தவிக்கின்றனர்.

இயேசு பாலகனை இனம் காணமுடியாத ஏரோது அரசன் மாசுமறுவற்ற ஆண்மகவையெல்லாம் கொன்றொழித்த காலம், இன்றும் நம மத்தியில் திரும்புகிறதோ என ஏங்கித்தியங்கும் இவ்வேளையில், "அஞ்சாதீர், இதோ, மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்" என அன்று ஆயர்களுக்குக் கூறிய அதே ஒலி இன்றும் நமக்குக் கேட்கிறது.

ஆகவே "யானையின் பலம் தும்பிக்கையிலே, மனிதனின் பலம் நம்பிக்கையிலே" என்ற முதுமொழிக்கிணங்க, இயேசு பெருமானில் வைத்திருக்கும் நம்பிக்கையில் தளராமல் உறுதியாக நிற்போமாக. இந்த நம்பிக்கை நமது இனத்தை வாழ வைக்கும்.

## விவசாய டிப்ளோமா ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், டிச.25

விவசாய டிப்ளோமா ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களது சேவைமுன்பயிற்சிக்கான அழைப்புக் கடிதத்தை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கல்விச் சேவை அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று கல்விச்சேவை ஆணைக் குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்தார்.

நியமனம் பெற்றோர் வருமாறு:-

ஏ. அருள்பாஸ்கரன்-அலங்கேணி எம். ஐ. மொகமட் அசார்-காரைதீவு எம்.ஏ. அபுசாலி-அக்கரைப்பற்று. ஏ. அப்துல் மஜீத் - சம்மாந்துறை. பி. சிவசண்முகநாதன் - மாத்தளை, ஏ. எல். முபாரக் - அக்கரைப்பற்று ஜி சிறிரஞ்சன்-வவுனியா எஸ் சிவராஜா-மானிப்பாய். ஜே சத்தியேந்திரன் - உடுப்பிட்டி. எஸ். வேலுப்பிள்ளை-உருத்திரபுரம். திரு. தி. பி கந்தையா - யாழ்ப்பாணம். எஸ். சத்தியபாலன்-மல்லாகம். எஸ். சிவகுமார் - நயினாதீவு. செல்வி. எஸ். சுந்தகௌரி - நயினாதீவு. எஸ். கிருபானந்தன்-கோப்பாய். கே. வசீகரன்-இளவாலை கே கணேசலிங்கம் - கிளிநொச்சி. செல்வி. எம். மேனகா-உரும்பராய். ஏ எஸ். பாலகிருஷ்ணன் - சுழிபுரம். ரி. மதிவதனன்-வசாவிளான் .கே குணசீலன்-சாவகச்சேரி.

சேவை முன் பயிற்சிக்கான ஏனைய பாட ஆசிரியர்கள்.

செல்வி கே காந்திமதி-யாழ்ப்பாணம். செல்வி. என். சுகந்தியாழ்ப்பாணம் செல்வி. என் பரமசுந்தரி-செட்டிகுளம். செல்வி. பி. மனோகரன் - யாழ்ப்பாணம். செல்வி. ஏ. விமலேஸ்வரி - வட்டுக்கோட்டை. செல்வி. பி. ஏ. தேவராசன் - கிளிநொச்சி செல்வி. ஜி. விஜயலட்சுமி- செட்டிகுளம். செல்வி. என். தனலட்சுமி-செட்டிகுளம். செல்வி, எஸ். பாலேந்திரன் - காரைநகர் செல்வி. எஸ். பொன்னுச்சாமி - தொண்டமனாறு செல்வி. ஜி. சிறீபத்மநாதன் - கரவெட்டி. திருமதி ஏ. தங்கராசா - காத்தான்குடி. திருமதி. ஆர். பிரேமாவதி - வல்வெட்டித்துறை. திரு. இ. சத்தியதேவன்-புத்தூர். திரு. வி. பிரபாகரன் திருக்கோவில். செல்வி. இ. சுபாசினி-பருத்தித்துறை. செல்வி. பி கமலாம்பாள் - புலோலி. திரு எஸ். எஸ். சண்முகநாதன் - முத்தையன்கட்டு.

## அகதிகள் நாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக் கொள்ள இயலாது— ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதாக செய்திகள் கிடைக்கின்றன. அது குறித்துத் 'தமிழ் நாட்டு மக்கள்தான் கவலைஅடைகிறார்கள் என்பதில்லை. முழு இந்தியாவுமே — அதாவது இந்தியா முழுவதிலும் வாழும் மக்கள் எல்லோருமே கவலைப்படுகிறார்கள்.

இலங்கையில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும் இதனை நாம்பல தடவைகள் இலங்கை அரசிடம் ஏற்கனவே வற்புறுத்தி உள்ளோம்.'

இலங்கை இனப் பிரச்சினைக்கு, இராணுவத் தீர்வு உகந்த வழியல்ல. இலங்கை அரசு அந்த வழியை நாட நினைப்பது நல்லதல்ல — இவ்வாறு பிரதமர் ராஜீவ் தெரிவித்தார்

இதற்கிடையில் வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்திக்க இங்கு வந்திருந்த ஈழம் தேசிய விடுதலை முன்னணிப் பிரதிநிதிகள் சென்னை திரும்பிவிட்டனர். திரு. ரொமேஷ் பண்டாரியுடன் அவர்கள் இரு தடவைகள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

## கல்வியங்காட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் உதவி விலைக்கட்டுப்பாட்டாளர் திரு. மார்க்கண்டுவின் பணிப்பின் பேரில் நடைபெற்ற இம்முற்றுகையின் போது நல்லூர் கிராமசேவையாளர் திரு. பி. சண்முகலிங்கம் நல்லூர்ப் பகுதிப் பாவனையாளர் சங்கத் தலைவர் திரு. சு யோகீஸ்வர சர்மா ஆகியோர் சமுகம் அளித்திருந்தனர்.

## நேற்றும் ஒரு சைக்கிள் களவு

நல்லூர். டிச.25

நேற்றும் யாழ். பெரியாஸ்பத்திரியில் சைக்கிள் ஒன்று திருடப்பட்டது.

நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்!!!
புத்தாண்டு மணக்க **அண்ணா கோப்பி**
ஸ்தாபனத்தார் அளிக்கும் **வெகுமதிகள்**
உங்கள் வாடிக்கைக் கடைகளில்
**அண்ணா No. 1 கோப்பிகளை வாங்கி**
பைக்கற்றுக்குள்ளிருக்கும் கூப்பன்களைக் கொடுத்து
வெகுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
3 கிலோ அண்ணா கோப்பிக்கு — 1 எவர்சில்வர் கப்
2 கிலோ அண்ணா கோப்பிக்கு — 1 பிளாஸ்டிக் கப் & சோசர்
1 கிலோ அண்ணா கோப்பிக்கு — 1 பிளாஸ்டிக் கப்
500 கிறாம் அண்ணா கோப்பிக்கு — 1 கோப்பி
1-12-85 முதல் 28-2-86 வரை முடியும் விற்பனைக்கே
இப்பரிசுகள் வழங்கப்படும்.
வெகுமதிகளை நேரில் பெற்றுக்கொள்ளவேண்டிய இடம்:
**அண்ணா கோப்பிக் கடை,** நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
கடிதத் தொடர்பு: அண்ணா தொழிலகம் — இணுவில்.

ANNA COFFEE
அண்ணா பற்பொடி
ANNA
அண்ணா பத்தி

எமது
**நத்தார் - புதுவருட**
வெளியீடுகள்:
விஜயகாந்த் — நளினி
**அமுதகானம்** (PYRAMID ORIGINAL)
விஜயகாந்த் — அம்பிகா
**தண்டனை** (GOLD ORIGINAL)
முரளி — லட்சுமி
**ஒரு மலரின் பயணம்** (PYRAMID ORIGINAL)
சிவாஜி — பிரபு — நளினி
**ராஜரிஷி** (THOMSUN ORIGINAL)
சிவகுமார் — அம்பிகா
**கற்பூர தீபம்** (THOMSUN ORIGINAL)
பாக்கியராஜ் — கல்பனா
**சின்ன வீடு** (THOMSUN ORIGINAL)
ஆனந்தபாபு — ஜீவிதா
**வெற்றிக்கனி** (THOMSUN ORIGINAL)
ராஜீவ் — வனிதா
**வெற்றி நமதே** (PYRAMID ORIGINAL)
உங்கள் ஓடர்களைப் பதிவு செய்து
கொள்ளுங்கள்.
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
நத்தார் - புதுவருட வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.
**துணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -23665

**ஷப்ரு அறிவித்தல்**
எதிர்வரும் வெள்ளிக்கிழமை (27-12-1985) அன்று எமது நிறுவனம் திறக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகிறேம்.
**SHABRA**
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது உளம் நிறைந்த
கிறிஸ்மஸ் - புதுவருட
வாழ்த்துக்கள்
**IDEAL AGENCY**
'ESSENCE CANAL'
267-B, Power House Road,
JAFFNA.
Dial: 23648

வாடிக்கையாளர்கள்!
அன்பர்கள்!
ஆதரவாளர்கள்!
அனைவருக்கும் எமது
உளம் நிறைந்த
நத்தார்
புதுவருட
வாழ்த்துக்கள்!
**நியூ எஸ்.கே.**
**பிரிண்டிங் வேக்ஸ்**
7, மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
டொபி, சாக்லேட் மேலுறைகள்,
பொலித்தீன், சொப்பிங் பாக் (Bags)
பிளாஸ்டிக் வகைகளை அதி விசேடமாக
அச்சிடுபவர்கள்.

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது உளம் நிறைந்த
கிறிஸ்மஸ் - புதுவருட
வாழ்த்துக்கள்
**வீடியோ விஷன்**
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
உங்கள் வாழ்வினிலே ஒரு நாள்! அதுவே
உங்கள் உள்ளங்களின் இனிய நினைவு நாள்.
நிகழ்ந்த நிகழ்வுகளைக் காலமெல்லாம்
சித்திரமாகக் கண்டுகளியுங்கள்.
வீடியோ விஷன் ஒளிப்பதிவு மூலம்
மங்கள நாடகள் மகிழ்ச்சிபெறும் வண்ணம்
அதி சிறந்த வீடியோ படம் எடுக்கும்
தொழில் நுட்பத்தில் வட இலங்கையில்
புகழ்பெற்றவர்கள்
**வீடியோ விஷன்**
ஸ்தாபனத்தார்.
வீடியோ விஷன்
என்றும் உங்கள் உள்ளக் களிப்பில்!

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2-ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியிட்ட திகதி 25-12-1985